4th August 1966]

Development of Kotagiri

* 95. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to develop Kotagiri as a Tourist Centre ; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம். கோத்தகிரியை உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்ற இடமாக அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) இதற்கான வேலைத் திட்ட விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்கள் மாற்றம்

* 96 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒரு கோட்டத்திலுள்ள (Revenue Division) யூனியன்களில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களை அவர்களது சொந்த யூனியனுக்கு மாற்றம் தரும் அதிகாரம் அக்கோட்ட R.D.O. அவர்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை, ஐயா.

• **திரு. இரா. நாராயணன்:** ஒரு கோட்டத்தில் பத்து பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அந்தப் பத்து பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ஆசிரியர்களை அந்தக் கோட்ட ரெவன்யூ டிவிஷனல் ஆபீஸரே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும். ஜில்லாவாரியாக ஏற்படுத்துவதற்கு காலதாமதம் ஆகிறது. இனிமேலாவது அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போது அந்த அதிகாரம் ஜில்லா கலெக்டரிடம் இருக்கிறது. திருப்தியான அளவில் அது நடந்து வருவதால் எந்த விதமான மாற்றமும் செய்ய உத்தேசிக்கவில்லை.

ஆசிரியர்களுக்கு வீடுகள்

* 97 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா ?

(இ) ஆமெனில் எப்பொழுதிலிருந்து அமல்படுத்தப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இப்பொழுது அவசர நிலைமையினல் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் இல்லை.

திரு. சோ. ஆறுமுகம் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒன்றிரண்டு ஆசிரியர்களுக்கான விடுதிகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பத்து பதினைந்து ஆசிரியர்கள் விடுதிகளாவது கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப்பற்றித்தான் குறிப்பிட்டேன். நான்காவது திட்டத்தில் ஒரு ப்ளாக்கிற்கு, திருப்தியான அளவிற்கு, சற்றேறக் குறைய பத்து வீடு அளவில் கட்டி முடிக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த அளவில்தான் 1966--67-ல் கிட்டத்தட்ட 75 க்வார்ட்டர்ஸ் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

பெரியகோட்டை—மடப்புரம் சாலை

* 98 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை தாலுகாவில் பெரியகோட்டையிலிருந்து, மடப்புரம் வரை சாலை அமைப்பது எந்நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) அவ்வாறுன செயற்குறிப்பு ஏதுமில்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Municipal Central bus stand at Tiruchirappalli

* 99 *Q.*—Sri M. KALYANASUNDARAM, Sri V. SANKARAN } Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to question No. 481 on 31st March 1964—

(*a*) the present stage of the proposal to construct a Municipal Central bus stand at Tiruchirappalli; and

(*b*) when the proposal will be finalised ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில்வே நிலத்தின் மதிப்பு நிர்ணயிப்பது பற்றி மாவட்ட கலெக்டருக்கும், தென் பிராந்திய ரெயில்வே பொது மேலாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.